# தூய தெரசா கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி. தரங்கம்பாடி.

## இரண்டாமாண்டு, நான்காம் பருவம்.

## தொல்காப்பியம் - எழுத்ததிகாரம் - 16LCCLT8

---

காலம்: 3 மணி                    உயரளவு மதிப்பெண்: 75

---

**I. அனைத்து வினாக்களுக்கும் ஓரிரு தொடர்களில் விடையளி. (10x2=20)**

1. தொல்காப்பியர் சுட்டும் சார்பெழுத்துக்கள் யாவை?
2. நூன்மரபு பெயர்க் காரணம் தருக.
3. குற்றிய லுகரமும் அற்றென மொழிப குறிப்பு தருக.
4. "அவ்வியல் நிலையும் ஏனை மூன்றே" – விளக்கம் தருக.
5. அஃறிணை விரவுப்பெயர் இயல்புமா ருளவே - விளக்கம் தருக.
6. யாவென் வினாவும் ஆயியல் திரியாது - விளக்கம் தருக.
7. மரப்பெயர்க் கிளவி மெல்லெழுத்து மிகுமே – விளக்கம் தருக.
8. ஆண்மரக் கிளவி அரைமர இயற்றே - விளக்கம் தருக.
9. குற்றியலுகரம் எத்தனை வகைப்படும்? அவை யாவை?
10. நாடுரி – புணர்ச்சி விதி தருக.

**II. ஐந்து வினாக்களுக்கு ஒருபக்க அளவில் விடையளி. (5x5=25)**

11. தொல்காப்பியப் பாயிர சிறப்பை விளக்குக. (அல்லது)
    மாத்திரை என்றால் என்ன? உயிரெழுத்துகளின் மாத்திரை ஒலிப்பு குறித்து எழுதுக.
12. மூவகை மொழிகள் குறித்து விளக்குக. (அல்லது)
    போலி எழுத்துகள் பற்றி விளக்குக.
13. எழுத்துகளின் பொதுப்பிறப்பு கூறி உயிரெழுத்துகளின் பிறப்பு பற்றி விளக்குக. (அல்லது)
    எழுத்துச் சாரியை குறித்து எழுதுக.
14. ஐகார ஈற்றுச் சொற்கள் புணரும் முறையினை விளக்குக. (அல்லது)
    ணகர ஈற்றுச் சொற்களின் புணர்ச்சியினை விளக்குக.
15. தொண்ணூறு,தொள்ளாயிரம் புணர்ச்சி விதி கூறுக. (அல்லது)
    குன்றக்கூகை, ஐவட்டி - புணர்ச்சி விதி கூறுக.

**III. மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடையளி. (3x10=30)**

16. எழுத்துகளின் மயக்கம் குறித்த இலக்கணத்தை விளக்குக.
17. மொழிக்கு முதலாகும் ஈறாகும் எழுத்துகளை விளக்கி வரைக.
18. மெய்யெழுத்துகளின் பிறப்பு பற்றி விளக்குக.
19. புணரியலில் கூறப்பெறும் உருபு புணர்ச்சியைத் தொகுத்துரைக்க.

20 தொல்காப்பியரின் குற்றியலுகரக் கோட்பாட்டைப் புலப்படுத்துக.